சாட்சிகள் வாக்குமூலம்
பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S. No. 87/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.நடராஜன் (வா.சா.–1) | தொழில் | | |
| த/பெ. க/பெ. | : | கருப்பணநாடார் | வயது | | |
| கிராமம் | : | இந்திரா நகர் | இனம் | | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 20.01.2026 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

1973 ஆம் வருடத்திய வரைமுறைச் சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாள் அளித்த சாட்சியம்.

வாதி தரப்பு முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை சத்தியப்பிரமான கூடுதல் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை தான். அவை எனக்கு நன்றாக தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 09.09.2024 | மாதிரி வரைபடம் | அசல் |
| வா.சா.ஆ.2 | 30.01.2001 | கருப்பணநாடார் பெயரில் வழங்கிய நில சுவாதீன ஒப்படைப்பு ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.3 | 23.12.2003 | நானும், கருப்பணநாடாரும், முருகையநாடார் வகையறா மீது தாக்கல் செய்து வழக்கின் நீதிமன்ற தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 13.08.2024 | லேட்.கருப்பணநாடார் பெயரில் வழங்கப்பட்ட பட்டா | கணினி நகல் |
| வா.சா.ஆ.5 | 26.12.2023 | நான் தாவா நிலத்தை அளக்க அரசுக்கு செலுத்திய கட்டண இ– | கணினி நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | செலான் ரசீது | |
| வா.சா.ஆ.6 | 25.06.2024 | ஜமாபந்தி மூலம் தாவா சொத்தை அளக்க மனு கொடுத்ததற்கான ஒப்புகைச் சீட்டு | கணினி நகல் |
| வா.சா.ஆ.7 | 18.09.2024 | தாவா சொத்திற்குரிய அரசாங்க மதிப்பீடு | கணினி நகல் |
| நீ.ம.சா.ஆ.1 | 26.09.2025 | நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை | அசல் |
| நீ.ம.சா.ஆ.2 | 26.09.2025 | நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் | அசல் |

மேற்படி சாட்சியத்தையும், சான்றாவணங்களையும் ஏற்று நான் தாக்கல் செய்த வழக்கில் கோரிய பரிகாரங்களை வழங்கி உத்தரவிட வேண்டுகிறேன்.

(கற்றறிந்த வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.